**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
***ஒ.எஸ்.61/2019***
**2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03-ம் நாள் திங்கட்கிழமை**

**வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: சீனிவாசன்** | **சாதி** | **:** |
| **த-பெ** | **:** | **சமயம்** | **:** |
| **கிராமம்** | **:** | **தொழில்** | **:** |
| **வட்டம்** | **:** | **வயது** | **:** |

**வா.சா.1 சீனிவாசன் ஆஜர்.**

**(பிரதிவாதி 29வது தரப்பில் No instruction மெமோ தாக்கல் செய்யப்பட்டு 29வது பிரதிவாதி அழைக்கப்பட்டு ஆஜராகததால் அவரது தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.)**

**30வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை மாணிக்கம் என்பவர் விற்றுவிட்டதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.தாவா வழக்கில் எத்தனையாவது இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் ஒரே இலக்க சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்தின் புல எண் ஞாபகத்தில் இல்லை. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. ஆனால் எனக்கு 70 வயதாகிறது ஆரம்ப முதலிலே நாங்கள் தான் அனுபவத்தில் வைத்திருக்கிறோம். வம்சாவழிப்பட்டியலில் சொல்லியுள்ள வாரிசுகளை தெரியுமா என்றால் தெரியும்.

இறந்த வாரிசுதாரர்களுக்கு இறப்புச்சான்றிதழ் கொடுத்துள்ளேனா என்றால் சித்தப்பா அவர்களுக்கு மட்டும் கொடுத்துள்ளேன். சித்தப்பா பெயர் பாண்டி. பாண்டி எப்பொழுது இறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. சித்தப்பா பாண்டிக்கு வாரிசு சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பாண்டி எந்த வருடம் சொத்தை விற்றார் என்று எனக்கு தெரியாது. பாண்டி எந்த சொத்தை விற்றார் என்றால் தாவா சொத்தை விற்றார்.

எனக்கு பூர்வீக சொத்து எத்தனை இலக்கம் உள்ளது என்றால் நிறைய உள்ளது. நிறைய உள்ள சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய அப்பா பெயர் கந்தசாமி. அவருக்கு வாரிசு சான்று கொடுத்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. பிராதில் 9வது பத்தியில் பல ஆண்டுகளுக்கு முன்பு வாய்க்கரலாக வாய்மொழி பாகம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். அது எந்த வருடம் என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

பாண்டி எந்த புல எண்ணில் விற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த சொத்தில் தற்போது என்ன உள்ளது என்று எனக்கு நேரடியாக தெரியாது. தாவா வழக்கு சொத்துக்களை பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது என்றாலும், 30வது பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் காரணத்திற்காக தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. பாண்டி எந்த வருடம் தாவா சொத்துக்களை விற்றார் என்று தெரிந்துகொண்டீர்களா என்றால் எனக்கு தெரியாது. வழக்கில் 30வது பிரதிவாதியை ஏன் சேர்த்தீர்கள் என்றால் தாவா வழக்கில் டவர் அமைத்திருந்ததால் அவரைஇவ்வழக்கில் சேர்த்தோம். தாவா வழக்கு சொத்தை பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றாலும், நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**District Munsif,**
**Manamadurai.**